குரல் வளையை நெரிக்கும் வகையில் – ஜனநாயகத்தின் பேரில் எதேச்சதிகாரம்!

# இணைய முடக்கத்தில் இந்தியா முதலிடம்!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, மார்ச் 7 -
தேதிய ‘தீக்கதிர்’ நாளேட்டின் நேற்றைய தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிப்பதில் ராணுவ ஆட்சி நடக்கும் மியான்மருக்குப் போட்டி யாக இந்தியா மாறியிருக்கிறது. மோடி அரசின் கீழ் இந்தியாவில் இணைய முடக்கங்கள் மற்றும் தகவல் கட்டுப்பாடுகள் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவில் அதிகரித்துள்ளன. குறிப்பாக கடந்த 6 ஆண்டுகளாக ஜனநாயக ஆட்சி நடைபெறும் நாடுகளில் இணைய முடக்கத்தில் இந்தியா முதலிடத்தை வகித்து வருகிறது.

‘அக்சஸ்நவ்’ அமைப்பின் ஆய்வறிக்கைப்படி கடந்த 2024 ஆம் ஆண்டில் மட்டும் இந்தியாவில் 84 முறை இணையம் முடக்கப்பட்டிருக்கிறது. அதே நேரம் ராணுவ ஆட்சி நடைபெறும் மியான்மரில் 85 முறை இணையம் முடக்கப்பட்டிருக்கிறது. ஜன நாயகத்தின் பேரில் இந்தியாவில் எதேச்சதிகார ஆட்சி நடைபெறுகிறது என்பதையே இந்த ஆய்வறிக்கை உறுதிப்படுத்துகிறது.

அதே போல் ஜனநாயக குறியீட்டில் இந்தியா 167 நாடுகளில் 111 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாக அரசியல் சுதந்திரம், ஊடக சுதந்திரம், தேர்தல் நடைமுறைகள், குடிமக்களின் உரிமைகள் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு எகனாமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யூனிட் என்ற நிறுவனம் இந்த ஆய்வை மேற்கொண்டிருக்கிறது. இதில் ஜனநாயகத்திற்கு ஆபத்தான நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம் பெற்றிருக்கிறது.


தீக்கதிர்
2025 மார்ச் 06 வியாழக்கிழமை
நெரிக்கப்படும் ஜனநாயக குரல்வளை

இந்திய அரசியலமைப்பு 19(1) சட்டக்கூறு, குடி மக்களுக்கு பேச்சு சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல்களை அணுகும் உரிமையை உறுதிப்படுத்துகிறது. ஆனால், இணைய முடக்கங்கள் இந்த உரிமைகளை நேரடியாக மீறுகின்றன. குறிப் பாக, பொது விவாதங்களில் மக்கள் பங்கேற்கும் உரிமையை அடக்குவது, அரசு நடவடிக்கைகள் குறித்து விமர்சனம் செய்யும் உரிமையை தடுப்பது ஆகியவை அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப் படை நோக்கத்தை மீறுவதாகும்.

அடிப்படை உரிமைகளை மட்டுமல்ல, அரசியல் எதிர்ப்பை ஒடுக்குவதற்கும் மோடி அரசு இணைய முடக்கங்களைப் பயன்படுத்தி வருகிறது. தகவல் பரிமாற்றத்தை கட்டுப்படுத்துவது பாசிச மனப்பான்மையின் வெளிப்பாடாகும். இதன் மூலம் ஜனநாயக உரிமைகள் மட்டுமல்ல, நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் கடுமையாக பாதிக்கப் படுகிறது.

இணைய முடக்கத்தினால் 2023ஆம் ஆண்டின் முதல் பாதியில் மட்டும் ரூ.16,597 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. மேலும், 21,000 வேலை கள் பறிக்கப்பட்டிருக்கின்றன. அந்நிய முதலீட்டில் ரூ.1,030 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதுதான் மோடி அரசு முன்வைக்கும் டிஜிட்டல் இந்தியா வின் உண்மையான முகம்.

இதில் மணிப்பூர், ஜம்மு காஷ்மீர், ஹரியானா போன்ற மாநிலங்களில் மக்களின் அடிப்படை உரிமைகள், பொருளாதாரம் மற்றும் கல்வி கால வரையின்றி பாதிக்கப்படுகின்றன. இது “பாது காப்பு நடவடிக்கை” அல்ல; அரசியலமைப்புச் சட்டத்தை அப்பட்டமாக மீறி, ஜனநாயகத்தை அரிக்கும் நவீன பாசிசப் போக்கின் அடையாளமாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாநில அளவிலான அனைத்து மாவட்ட சுகாதார அலுவலர்கள், மாநகராட்சி நல அலுவலர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது!



சென்னை, மார்ச்.7-
தேனாம்பேட்டை, டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில், மாநில அளவிலான அனைத்து மாவட்ட சுகாதார அலுவலர்கள், மாநகராட்சி நல அலுவலர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் கூட்டம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் ஆற்றிய உரை வருமாறு:-

நமது மாநிலத்தில் உள்ள மருத்துவக்கட்டமைப்புகள் இந்தியாவில் உள்ள வேறு எந்த மாநிலங்களிலும் இல்லை. குறிப்பாக சமீபத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்த வந்திருந்த அம் மாநில மருத்துவத்துறை அமைச்சர் மற்றும் குழுவினர் சென்னையில் பல்வேறு மருத்துவக்கட்டமைப்புகளை வியந்து பாராட்டி சென்றனர். இப்படி பல மாநிலத்தவரை சேர்ந்தவர்களே வியந்து பாராட்டும் நமது மருத்துவக்கட்டமைப்பில் தொற்றா நோய்களுக்கான சிறந்து செயல்பட்டமைக்கு79வதுஐக்கியநாடுகள்பொதுசபையின்போது United Nation Inter agency Task Force Award - 2024 வழங்கப்பட்டது. மேலும் மருத்துவத்துறையில் சிறந்த திட்டங்களாக மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48, இதயம் காப்போம், சிறுநீரகம் பாதுகாப்போம் திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம், பாதம் பாதுகாப்போம் திட்டம், நடப்போம் நலம் பெறுவோம் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் வேறு மாநிலத்தில் செயல்படுத்திடாத திட்டங்கள் எல்லாம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மகப்பேறு இறப்பு விகிதம் ஆண்டுதோறும் குறைந்து வரும் நிலையில் மகப்பேறு இறப்புவிகிதம்ஒரு இலட்சம்பிறப்புகளுக்கு2020-2021 - 73 இருந்து2021-22 ல் - 90.5 ஆகவும், 2022-2023 ல்52 ஆகவும், 2023-24 - 45.5 என்றஅளவில்குறைந்து, 2024-25 (அக்டோபர்வரை) 39.4 ஆககுறைந்துள்ளது. ஆகையார் இந்த இறப்பு விகிதம் நமது அனைவரின் முயற்சிகளால் இன்னும் குறைய வேண்டும். அதேபோல் குழந்தைமரணவிகிதம்

1000 பிறப்புகளுக்கு 2020-2021 - 9.7 இருந்து, 2021-22 - 10.4 ஆகவும், 2022-2023 ல் 10.2 ஆகவும், 2023-24 - 8.2 என்றஅளவில்குறைந்து, 2024-25 (அக்டோபர்வரை) 7.7 ஆககுறைந்துள்ளது.


தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021 ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் தொடங்கப்பட்ட மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான திட்டம் தற்போது 2,19,32,412 பேர் முதல் சேவை என்கின்ற வகையிலும், 4,40,73,150 பேருக்கு தொடர்சேவை என்கின்ற வகையிலும் இத்திட்டத்தின் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் இத்திட்டத்தின் வெற்றிக்கு இன்னும் நீங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். மேலும் தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது (NQAS) 2013-14 இல் தொடங்கப்பட்டது. இதுவரை பெற்றிருக்கும் 824, கடந்த ஆட்சியில் 69 விருதுகள் பெறப்பட்டிருந்த விருது தற்போது 755 விருதுகள் பெறப்பட்டிருக்கிறது. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் NQAS சான்றிதழ்களுக்கு தகுதி பெற உழைக்க வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட சான்றிதழ்(LaQshya விருதும் 2018ல் தொடங்கப்பட்டது. இதுவரை 111 விருதுகள் நமக்கு கிடைத்துள்ளது. கடந்த ஆட்சியில் 29 விருதுகள் மட்டுமே பெறப்பட்டது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 82 விருகள் கூடுதலாக பெறப்பட்டுள்ளது. கலைஞரின்வருமுன் காப்போம்முகாம் ஆண்டிற்கு 250 முகாம்கள் என்று திட்டமிடப்பட்டு 2025 ஆம் ஆண்டு 1250 முகாம் என இலக்கு கொண்டு தற்போது 28.02.2025 வரை 1575 முகாம்கள் நடத்தப்பட்டு 15,87,939 பேர் பயன் பெற்றுள்ளார்கள். அதே போல் இதயம் காப்போம் திட்டம் 27.06.2023 அன்று கோவை மாவட்டம், மலுமிச்சம்பட்டியில் தொடங்கப்பட்டு தற்போது முதல் 01.03.2025 வரைபயனாளிகள் 15,325 பேர் பயன்பெற்றுள்ளனர். அதேபோல் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பாம்புக்கடி, நாய்க்கடிகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. குக்கிராமங்கள், மலைக்கிராமங்களில் உள்ள மக்களுக்கு பாம்புக்கடி மருந்துகள் பெரிய அளவில் பயன்பெற்று வருகிறது. மேலும் கடந்த 4 ஆண்டுகளில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் பெரிய அளவில் நடத்தப்பட்டு வருகிறது. 1000 முகாம்கள் என தொடங்கப்பட்டு 20,000த்திற்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. 15.10.2024 முதல் 12.01.2025 வரைமொத்தமுகாம்கள்98,455, 51,48,732 பேர் பயன்பெற்றுள்ளனர், இந்த முகாம் மூலம் காய்ச்சல்பாதிக்கப்பட்டவர்கள் 27,217 பேர் கண்டறியப்பட்டுள்ளனர். நடப்போம் நலம் பெறுவோம் திட்டம் 38 மாவட்டங்களில் தொடங்கப்பட்டாலும், திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் இன்னும் முழுமை பெறவில்லை. அதற்கான பணிகளை விரிவுப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் சமீபத்தில் பத்திரிக்கையில் காசநோய் தமிழ்நாட்டில் அதிகமாக பரவி வருவதாகவும், 2000த்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் பரவியது. இதுகுறித்து பொது மக்கள் அச்சப்படாமல் இருக்க தொழுநோய்களுக்கும், காசநோய்களுக்கும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டிருப்பதை தெரிவிக்க வேண்டும். இதுகுறித்து பதட்டப்பட தேவையில்லை என்று தெரிவிக்க வேண்டும். நேற்றைக்கு முன்தினம் நானும், நமது துறையின் செயலாளர் அவர்களும் ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ.பி. நட்டா அவர்களை சந்தித்து 500 துணை சுகாதார நிலையங்களும், 50 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும், 6 புதிய அரசு மருத்துவக்கல்லூரிகள் தேவை என்று மருத்துவத்துறை சார்பாக 9 கோரிக்கைகள் வைத்திருந்தோம். அவரும் பரிசீலிப்பதாக தெரிவித்து இருக்கிறார்கள். மேலும் பாதம் பாதுகாப்போம் திட்டம் மக்கள் மத்தியில் பெரிய அளவில் கொண்டு சென்று சேர்க்க வேண்டும். மேலும் கடந்த 4 ஆண்டுகளில் ஏறக்குறைய 10,000த்திற்கும் மேற்பட்ட துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. புதிதாக திறந்து வைக்கப்பட்ட கட்டிடங்களுக்கு கல்வெட்டு வைத்திருப்பதை அனைவரும் உறுதி செய்திட வேண்டும். மேலும் 2025-26 ஆம் ஆண்டிற்கு 15வது நிதிக்குழுவிற்கு புதிதாக கட்டப்பட வேண்டிய கட்டிடங்களுக்கு பட்டியல் விரைந்து தயார் செய்து அனுப்ப வேண்டும். இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் பயன்படுத்த முடியாத கட்டிடங்கள் மற்றும் புதிய கட்டிடப்பணிகள் முடிக்கப்பட்டு விரைந்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும். மேலும் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 500 நலவாழ்வு மையங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் நான் ஆய்விற்கு சென்றிருந்த போது 2 நலவாழ்வு மையங்களில் மருத்துவர்கள் இல்லாத நிலையில் இருந்தது. நலவாழ்வு மையத்தில் 4 பணியிடங்கள் அதாவது 1 மருத்துவர், 1 செவிலியர், 1 சுகாதார ஆய்வாளர், 1 உதவியாளர் என 4 பணியிடங்கள் இருக்க வேண்டும். மாவட்ட சுகாதார அலுவலர்கள் காலியாக உள்ள பணியாளர்கள் பணியிடங்களை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களுடன் கலந்து பேசி மாவட்ட சுகாதார நல வாழ்வு சங்கம் மூலமாக நிரப்பிட வேண்டும். மேலும் அரசு மருத்துவமனைகளில் காலை மற்றும் மாலை என இரண்டு முறை ஆய்வு செய்ய வேண்டும். மேலும் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் தமிழ்நாடு முழுவதும் எவ்வளவு பேர் பயன்பெற்று இருக்கிறார்கள் என்கின்ற விவரம் வரும் ஜீன் 2025 மாதத்திற்குள் தெரியப்படுத்த வேண்டும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம் மற்றும் பொது சுகாதாரத்துறை கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கோ. இளங்கோவன்

### மார்ச் 7 (2015)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீதும் கழகத்தின்மீதும் தன் இறுதிமூச்சு வரை பற்று கொண்டிருந்தவர்.

உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்த இவர், மாநிலம் முழுவதும் தலைமைக் கழகப் பேச்சாளராக ‘துறவி’ எனும் புனைப் பெயருடன் கழகக் கொள்கையினை பரப்பியதுடன், மாவட்ட அவைத்தலைவர், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை கழகத்தில் வகித்தவர்.

1971, 1977 ஆகிய இரண்டு முறை நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக திருச்சி மத்திய சிறையில், ஓராண்டு காலம் நெருக்கடிகால “மிசா” கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# சைதை அரசு மருத்துவமனையில் மார்ச் 1 - ல் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று வழங்குகிறார்!

சென்னை, மார்ச் 7-
முதலமைச்சர் - கழக தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாள் முன்னிட்டு சைதாப்பேட்டை உள்ள மகப்பேறு மருத்துவமனையில் மார்ச் 1 ல் பிறந்த குழந்தைகளுக்கு சைதாப்பேட்டை மருத்துவ அணியின் தொகுதி அமைப்பாளர் அ. துரைராஜ் தலைமையில் சைதை பகுதி செயலாளர்கள் இரா. துரைராஜ், எம். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் இன்று (7.3.2025) காலை 9.30 மணிக்கு மார்ச் 1 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்.

இதில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ் குமார் அவர்களும் மற்றும் எஸ். குணசேகரன், சைதை மா. அன்பரசன், வழக்கறிஞர் எம் ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன் மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் என்.அனீஸ் மற்றும் பகுதி நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட, நிர்வாகிகள், மற்றும் கழகத் தோழர்கள், கழக முன்னோடிகள், மகளிர் அணி, அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

# வாழ்வார் என்றும் பேராசிரியர்!



எவரும் நமக்குத் தாழ்ந்தவர் இல்லை!
எவர்க்கும் நாமும் தாழ்ந்தவர் இல்லை!
சுவரில் எழுதிய சித்திரம் போலே
சொன்னவர் இப்படிப் பேரா சிரியர்!

பெரியார், அண்ணா இன்றைக் கில்லை!
பெரிய வெற்றிடம் நமக்கின் றில்லை!
இருவரின் வடிவாய் கலைஞர் இருக்கிறார்!
என்று மொழிந்தவர் பேரா சிரியர்!

சூடும் சொரணையும் சொற்களில் தந்தவர்!
சுயமரி யாதை உடுத்தி நடந்தவர்!
ஏடும் நாடும் போற்ற வாழ்ந்தவர்!
இனமானக் காவலர் பேரா சிரியர்!

வலைப்ப டாதவர் வஞ்சகம் சூழ்ச்சியில்!
மயங்கி விடாதவர் வெற்றுப் புகழ்ச்சியில்!
குலப் பகைவரும் குறைசொல்ல முடியாக்
கொள்கைச் சூரியன் பேரா சிரியர்!

வான்மழை போலே கருணை பொழிந்தவர்!
வார்த்தையும் வாழ்க்கையும் ஒன்றென நின்றவர்!
தேன்மக ரந்தப் பூந்தமிழ்! எங்கள்
திராவிடத் தென்றல் பேரா சிரியர்!

ஏற்ற பொறுப்புக்குப் பெருமை சேர்த்தவர்!
எளிய தொண்டரை அரவ ணைத்தவர்!
சீற்றப் புயலாய் இனப்பகை முன்னே
சினந்து கனன்றவர் பேரா சிரியர்!

வண்கடல் அலையாய் ஆர்ப்ப ரித்தவர்!
வடக்கின் இடக்கை நேர்ள திர்த்தவர்!
கிண்கி ணீர்எனும் வெண்கலக் குரலால்
கீர்த்தி படைத்தவர் பேரா சிரியர்!

எங்கும் தமிழே! எதிலும் தமிழே!
இன்னுயிர் ஆகும் அன்னை நிலமே!
சிங்க மறவனே! சிலிர்த்தெழு வாய்!எனத்
தீக்கனல் பெய்தவர் பேரா சிரியர்!

எதுநம் பண்டைய தமிழ்மர பென்றும்
எதுநம் தொல்புகழ் வரலா றென்றும்
“புதுவாழ்வு” என்னும் இதழை நடத்திப்
பொன்னொளி தந்தவர் பேரா சிரியர்!

எத்தனைச் சோதனை இடர்தொடர் கணையாய்!
இடம்பிற ழாமல் தடம்புர ளாமல்
அத்தனைக் களத்திலும் தலைமைக்குத் துணையாய்
அருகில் இருந்தவர் பேரா சிரியர்!

ஆட்சியில் கழகம் வாகை சூடவும்
ஆதிக்க இந்தி அஞ்சி ஓடவும்
மூச்சும் பேச்சும் நிற்கும் வரைக்கும்
முழக்கம் செய்தவர் பேரா சிரியர்!

கலைஞரை என்னைப் பிரிக்க நினைப்பவன்
கலப்படம் இல்லாத முட்டாள்! என்றே
தலைமைச் செயற்குழு மண்டபம் அதிரச்
சாற்றிய கோமான் பேரா சிரியர்!

நதியென இயங்கும் நல்ல இளைஞன்!
நாட்டுக்கும் மொழிக்கும் கழகத் திற்கும்
“புதிய விடியல் ஸ்டாலின்” என்றே
புகழ்ந்து மகிழ்ந்தவர் பேரா சிரியர்!

வீட்டுச் சாவியைப் பிள்ளைக்கு வழங்கிட
வேறெவன் அனுமதி வேண்டும்? “ஸ்டாலின்”
ஆற்றல் தகுதியைக் கலைஞரும் நானும்
அறிவோம் என்றவர் பேரா சிரியர்!

உளமார் பொதுக்குழு ஒருமன தாக
ஒப்புதல் தந்தது! உமக்கு மட்டுமா?
“ தளபதி ஸ்டாலின்” இனிமேல், எனக்கும்
தலைவர் என்றவர் பேரா சிரியர்!

தொண்டறச் செம்மல்! நமக்குள் என்றும்
துலங்கும் ஒளியாய் விளங்கி மிளிர்வார்!
வண்டமிழ் முழங்கும் எண்டிசை எங்கும்
வாழ்வார் ஐயா பேராசிரியர்!



**கவிச்சுடர்**
**கவிதைப் பித்தன்**